**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ப. முரளி அர்த்தனாரி Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைபஸபெசி: *94890 56730*

தொலைபேசி: *0422 - 6611302*
நிகரி: *0422 - 2431821*
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 16.03.2022
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

***பட்டியிலன வகுப்பு வேளாண் பெருமக்களுக்கு வேளாண்பயிர்களில் ஒருங்கிணைந்த களை மேலாண்மைப் பயிற்சி***

*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், உழவியல் துறையில் செயல்பட்டு வரும் அகில இந்திய களை மேலாண்மை ஆராய்ச்சி திட்டத்தின் மூலம் பட்டியிலன வகுப்பு வேளாண்மை பெருமக்களுக்கு வேளாண்பயிர்களில் ஒருங்கிணைந்த களை மேலாண்மைப் பற்றிய கூட்டம் மார்ச் திங்கள் பதினோராம் தேதி அன்று பொள்ளாச்சி தாலுகா், புரவிபாளையம் கிராமத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. இத்திட்டமானது, பட்டியிலன வகுப்பு வேளாண் பெருமக்களுக்கு களை மேலாண்மைப்பற்றிய விழுப்புணர்வு ஏற்படுத்தவும் அதற்குண்டான இடுபொருள்களை இலவசமாக கொடுக்கவும் நிதிஉதவியை களை ஆராய்ச்சி இயக்குநரகம், ஜபல்பூர் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்திடமிருந்து பெறப்பட்டது.*

*இப்பயிற்சியினை முனைவர், இ. ரா. சின்னமுத்து, பேராசிரியர் மற்றும் தலைவர், உழவியல் துறை அவர்கள் தலைமையேற்று நடத்தி வேளாண்மைப் பயிர்களில் களைச்செடிகளை கட்டுப்படுத்த பயன்படுத்தப்படும் களைக்கொல்லிகள் பற்றிய விபரங்களை எடுத்துரைத்து வேளாண் பெருமக்களுக்கு தேவையான இடுபொருட்களை வழங்கினார். இப்பயிற்சியில், முனைவர். ந. வடிவேல், இணைப்பேராசிரியர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்கள் பங்கேற்று வேளாண்பெருமக்களுக்கு சிறுதானியங்கள் பயிர் சாகுபடி பற்றிய தொழில்நுட்ப விளக்கங்களை வழங்கினர். இப்பயிற்சியின் முக்கியமாக முனைவர். ப. முரளி அர்த்தனாரி, இணைப்பேராசிரியர் மற்றும் முதன்மை விஞ்ஞானி, களை மேலாண்மைத்திட்டம் அவர்கள் வேளாண்பெருமக்களுக்கு களைக்கொல்லிகளை எவ்வாறு எந்த அளவு மற்றும் என்னென்ன களைக்கொல்லிகளை எந்தெந்த பயிர்களுக்கு பயன்படுத்த வேண்டும் என்ற விபரங்களை வேளாண் பெருமக்களுக்கு செயல்முறையாக*

எடுத்து இறுதியாக விவசாயபெருமக்களுக்கு இடுபொருள்கள் பற்றிய விபரங்களையும் அதன் பயன்பாடு பற்றியும் விபரமாக எடுத்துரைத்ததார். இப்பயிற்சியின் போது வேளாண்பெருமக்கள் களைக்கொல்லிகள் மூலம் களை மேலாண்மையில் ஏற்படும் சந்தேகங்களை விரிவாகவும் விளக்கமாகவும் தெரிந்து கொண்டு இக்காலக்கட்டத்தில் வேளாண் கூலி ஆட்கள் பற்றாக்குறையினால் ஏற்படும் பிரச்சனைகளுக்கு மாற்று ஏற்பாடக களைக்கொல்லி பயன்பாடு பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டதாகவும் கூறினர். மேலும், வேளாண்பெருமக்கள் பார்த்தீனியம் மற்றும் அதன் பாதிப்புகள் பற்றிய விளக்கங்களையும் எடுத்துரைக்கப்பட்டது. இப்பயிற்சியில் திரு. நாகேந்திரன், தலைவர், புரவிபாளையம் ஊராட்சி அவர்கள் பங்கேற்று வேளாண் பெருமக்களை ஊக்குவித்து களை மேலாண்மைப் பயிற்சியை பயன்படுத்திகொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்ததர். முன்னதாக, திரு. அமீர், உதவி வேளாண்மை அலுவலர் அவர்கள் தமிழக அரசு வழங்கி வரும் வேளாண் பெருமக்களுக்கான சிறப்பு திட்டங்கள் பற்றிய விபரங்களை விரிவாக எடுத்துக் கூறினார். இப்பயிற்சியில் கிராம தங்கல் திட்டத்தில் பயின்று வரும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இறுதியாண்டு மாணவர்களும் பங்கு பெற்று வேளாண் பெருமக்களுடன் கலந்துரையாடினர். பயிற்சியின் இறுதியில் முனைவர். சி. பாரதி, உதவிப் பேராசிரியர் (மண்ணியியல்) அவர்கள் நன்றி உரை ஆற்றினார்

**மக்கள் தொடர்பு அலுவலர்**